அந்த நிலமே, அந்தக் கட்டிடமே போதும் என்கிற காரணத்தால்தான் இப்போது அதிலே பேருந்துகளை நிறுத்திக்கொண்டிருக்கிறோம். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்ததைப் பொறுத்தவரையிலே கூடுதலாக சில பணிமனைகளை அமைப்பதற்கு முன்னால் அதிலே வருவாய் கூடுதலாக வருவதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு அந்தப் போக்குவரத்துக் கழகம் மேலும் லாபமீட்டுகிறபோதுதான் புதிய பணிமனைகளை நாங்கள் துவக்குவதற்கு உத்தேசித்திருக்கிறோம். ஆகவே இப்போது வாடகைக் கட்டிடத்தில் இயக்குவது சாத்தியக்கூறாக இருக்கின்ற காரணத்தினாலே தொடர்ந்து இயக்கப்படும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 366, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

366–

இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிபவர்களை நிரந்தரம் செய்தல்.

**23868-டாக்டர் எஸ். சுந்தரராஜ்:*

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளத்தில் இயங்கிவரும் கூட்டுறவு நூற்பாலையில் பணி நிரந்தரம் இல்லாமல் பல வருடங்களாக வேலை செய்பவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் மாவட்டத்தில் அச்சங்குளத்தில் இயங்கிவரும் கூட்டுறவு நூற்பாலையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்படாமல் நியமிக்கப்பட்ட 67 நபர்களை பணி நிரந்தரம் செய்யும் பிரேரணை தற்போது கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெம்பரரியாக அந்தக் கூட்டுறவு நூற்பாலையிலே போட்டவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு பரிசீலித்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இங்கே கூறியுள்ளார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அந்தப் பணியாளர்களை இப்போது நிரந்தரம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவில் அதற்கான பரிசீலனை அனைத்தும் முடிந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தக் கூட்டுறவு நூற்பாலைக்கு 25 ஏக்கருக்கும் அதிகமான இடம் இருக்கிறது. இப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் முகமாக அங்கே இருக்கிற இந்த நூற்பாலையிலே 12,500 ஸ்பின்டில் நூற்பாலையை 25,000 ஸ்பின்டில் நூற்பாலையாக உயர்த்திடவும், நூற்பாலையில் பணியாளர்களை பங்குதாரர்களாக ஆக்கும் திட்டத்தில் இந்தக் கூட்டுறவு நூற்பாலையிலும் பங்குதாரர்களாக நியமிக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற நூற்பாலைகளைப்போல், இது தாட்கோ உதவியுடன் செயல்படக்கூடிய நூற்பாலையாகும். மாண்புமிகு உறுப்பினர் முயற்சித்து அங்கே இருக்கிற தொழிலாளர்கள் அனைவரும் அதன் பங்குதாரர்களாக இந்த நூற்பாலையிலே வர விரும்புவார் களானால் அதற்கான பிரேரணை தருவார்களானால் அதற்குப் பின்னர் தக்க நடவடிக்கை எடுக்க, அந்தத் தொழிலாளர்களைப் பங்குதாரர்களாக்க அவர்களிடத்தில் 'ஷேர்'களை வாங்கி அவர்களைப் பங்குதாரர்களாகப் போட்டுக் கொள்வதில் துறைக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அடுத்து 12,500 கதிர்களுடன் செயல்படும் அந்த நூற்பாலையை 25,000 கதிர்களைக் கொண்டதாக செயல்படுத்தும் விரிவாக்கத் திட்டத்தை அமலாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேள்விகளை எழுப்பியுள்ளார்கள், இந்த அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலை நல்ல முறையில் செயல் படுவதற்கு காட்டன் ரிவால்விங் பண்டு என்று வைப்பதற்கு ஒரு கோடி அளிக்க வேண்டுமென்று தாட்கோ அலுவலகத்திற்கு அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதைப் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாட்கோ அலுவலகத்தைக் கட்டாயப்படுத்தி பெற்றுத்தர முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 367, திரு. வெ. தமிழரசு; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

367-

நாமக்கல் வட்டம், செல்லம்பட்டி பகுதியில் சீரான மின்சாரம் வழங்குதல்

***17496*-திரு. வெ. தமிழரசு** :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் வட்டம், செல்லம்பட்டி பகுதியில் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். நாமக்கல் வட்டம், செல்லம்பட்டி உட்பட்ட பகுதிகளில் மின்சாரம் சீராக வழங்கும் பொருட்டு திருச்செங்கோடு உஞ்சணையில் ஒரு புதிய 230/110 கே.வி. துணை மின் நிலையம் 11-3-94 அன்று அமைக்கப்பட்டுள்ளது. நாமக்கல் 110 கே.வி. துணை மின் நிலையம் உஞ்சணையில் 230/110 கே.வி. மின் நிலையத்தோடு 12-3-94 அன்று இணைக்கப்பட்டது. அதன் பின்பு நாமக்கல் மற்றும் செல்லம்பட்டி பகுதிகளில் மின் வினியோகம் கணிசமாக சீர்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே 7 கோடியே 31 லட்ச ரூபாய் செலவில் இந்தத் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டதற்குப் பின்னால் இப்போது இந்தப் பகுதிகளில் மின் வினியோகம் சீரடைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கொடுக்கப்படும்போதுதான் இந்தத் தடை இருந்தது. நம்முடைய மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களுடைய சிறந்த நிர்வாகத் திறமையின் காரணத்தாலும், அவருடைய அறிவாற்றல்